**பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணித்திட்டம்) செயல்முறைகள், சென்னை–6.**

ந.க.எண்.068751/எம்/இ4/2022, நாள்.29.12.2022

**பொருள் :** உடற்கல்வி அரசு பள்ளி குழந்தைகளுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) 25 மினி விளையாட்டு மைதானங்களை பயன்படுத்துதல் – சார்பு.

**பார்வை :** 1.சென்னை–6, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) கடிதம் D.O.Letter No.8542/SI-1/2022, Dated 02.12.2022.

2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட நாள்– 22.12.2022.

-----

பார்வை–1ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி தமிழகத்திலுள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணவ / மாணவியர்களின் நலனுக்காக விளையாட்டு பயிற்சி அளித்திட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில் (SDAT) கீழ் செயல்படும் 17 மாவட்டத்திலுள்ள 25 மினி விளையாட்டு அரங்கத்திலுள்ள வசதிகளைப் பயிற்சிக்கு பயன்படுத்துவதற்கான சாத்திய கூறுகள் பற்றி ஆய்வு செய்ய மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் மற்றும் வட்டாரக்கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்திட கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, அந்தந்த மாவட்டங்களில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) கீழ் செயல்படும் 25 மினி விளையாட்டு மைதானங்களை சுற்றியுள்ள அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இணைப்பில் கண்டுள்ள சார்ந்த மாவட்டங்களில் உள்ள மினி விளையாட்டரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டுகளுக்கு ஏதுவாக பயிற்சி அளித்திடும் வகையில் சாத்தியக் கூறுகள் உள்ளனவா என்பது பற்றி ஆய்வுகள் செய்வதற்கு அம்மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் மற்றும் வட்டாரக்கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்திட, சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், (1) ஆய்வறிக்கையினையும் மற்றும் (2) இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் அவ்விளையாட்டு அரங்கத்திற்கு அருகாமையிலுள்ள அரசுப்பள்ளிகளில் (1 கி.மீ. குறைவாக மற்றும் 2 கி.மீ.க்குள்) விவரங்களையும் (Stadium wise) ஆணையரக இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித் திட்டம்) msectndse@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 03.01.2023க்குள் அனுப்பிவைக்குமாறு சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

இணைப்பு : மினி விளையாட்டு அரங்கங்களின் பட்டியல்

29/12/22

**இணை இயக்குநர்**
(நாட்டு நலப்பணித்திட்டம்)

29.12.22

பெறுநர்.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

நகல்
1) அனைத்து மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் (முதன்மைக்கல்வி அலுவலர்கள் வழியாக)
2) அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள் (முதன்மைக்கல்வி அலுவலர்கள் வழியாக)